# DEPOSITION OF WITNESS

## Crl.Misc.39
## (CHAPTER XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM

S.C.No.3/2016

Deposition of witness for Prosecution – PW5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராஜா | Caste | : | |
| S/o. | : | பழனிசாமி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act No.44 of 1969, on this 28.10.2024.

A1 & A2 present.

<u>முதல் விசாரணை;</u>

நான் பனமரத்துப்பட்டி பிரிவு ரோட்டில் குடியிருந்து வருகிறேன். நான் சந்தியூர் ஆலமரத்தில் சலூன் கடை வைத்து நடத்தி வருகிறேன். சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் 2014 ம் வருடம் தேதி நினைவில்லை ஒரு நாள் சந்தியூர் ஆலமரம் ராஜீ டீ கடையில் கடைக்கு வெளியே நான் காலை 9.30 மணி முதல் 10 மணிக்குள் நின்று டீ குடித்துக் கொண்டிருந்தேன். அப்போது நாமக்கல்லிருந்து சேலம் நோக்கி மணல்

லாரி வந்து கொண்டிருந்தது. சந்தியூர் ஆலமரத்திற்கு அருகில் 4 ரோடு பிரிவு ரவுண்டானா உள்ளது. அவ்வாறு பிரியும் இடத்திலிருந்து எதிரே உள்ள ரோட்டிற்கு மணல் லாரி சென்று சேலத்திலிருந்து நாமக்கல் நோக்கி வந்த ஜோதி பஸ்மீது மோதி பின்னர் பள்ளத்தில் போய் நின்றது. பேருந்திற்கு பின்புறம் வந்த இருசக்கர ஸ்ப்ளென்டர் வாகனத்தில் வந்த கணவன் மற்றும் மனைவி மீது லாரி மோதி அவர்கள் இருவரும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள்.

விபத்து ஏற்பட்ட உடன் 10,15 பேர் சம்பவ இடத்தை நோக்கி ஓடினோம். பிறகு ஆம்புலன்சிற்கு அங்கிருந்தவர்கள் போன் செய்தார்கள். ஹய்வே பெட்ரோல் வாகனமும் வந்தது. அதன்பின்னர் போலிசாரும் வந்தார்கள். இறந்துபோன நபர்களையும் காயம்பட்ட நபர்களையும் ஆம்புலன்சில் ஏற்றி கொண்டு சென்றார்கள். க்ளீனரையும் குழந்தையையும் ஒரு வண்டியில் ஏற்றி சென்றார்கள். தற்போது சாட்சி குழந்தை ஸ்ப்பௌன்டர் இருசக்கர வாகனத்தில் வந்ததாக சொல்கிறார். மேற்படி குழந்தை லாரியிலிருந்து கொட்டிய மண்ணுக்குள் கிடந்தது. பின்னர் சம்பவ இடத்திற்கு இரவு 9.30 மணி அளவில் மல்லூர் போலிசார் வந்தார்கள். லாரியிலிருந்து சிறிது மண்ணை கைபற்றினார்கள். லாரியிலிருந்து கீழே கொட்டிய மண்ணையும் சிறிது எடுத்தார்கள். பின்னர் லாரியையும் TN29 AK 6428 யையும் கைப்பற்றினார்கள். அதன் பின்னர் மேற்படி மண்ணையும் லாரியையும் கைப்பற்றியதற்காக கையெழுத்து வாங்குகிறோம் என்று சொல்லி என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது. கைப்பற்றுதல் மகசர்

அ.சா.ஆ.2 ஆகும். கைப்பற்றப்பட்ட TN29 AK 6428 என்ற டிப்பர் லாரி சா.பொ.1 ஆகும். லாரியிலிருந்து கைப்பற்றப்பட்ட மண் சா.பொ.2 லாரியிலிருந்து கீழே கொட்டிய மண் சா.பொ. 3 ஆகும். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

2 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நாமக்கல்–சேலம் ரோடு தென்வடல் ரோடு என்றால் எனக்கு திசை தெரியாது. சேலத்திலிருந்து நாமக்கல் நோக்கி செல்லும்போது அந்த ரோடு தென்புறத்தை நோக்கி செல்கிறது என்றால் சரி. சம்பவம் நடந்தபோது நான் ரோட்டிற்கு எந்த புறம் நின்று கொண்டிருந்தேன் என்றால் எனக்கு திசை தெரியாது. டமால் என்று சத்தம் கேட்டுதான் நான் சென்று பார்த்தேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்தபோது காலை சுமார் 10 மணிக்கு நான் எனது சலூன் கடை முன்பு இருந்தபோது விபத்து நடந்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. டீ கடைக்கு முன்னர் டீ குடித்துக்கொண்டிருந்தபோது விபத்து நடந்ததாக சொன்னேன். என்னை யார் விசாரித்தார்கள் என்றால் போலிசார் வந்தார்கள். ஆனால் அவர் ஆய்வாளராக என்று எனக்குத் தெரியாது. நான் ஸ்டேசனில் எத்தனை மணிக்கு மகசரில் கையெழுத்து செய்தேன் என்றால் இல்லை. நான் லாரி அருகில்தான் கையெழுத்து செய்தேன். என்னிடம் மட்டும்தான் கையெழுத்து வாங்கினார்களா என்றால் இல்லை. பக்கத்தில் இருந்த டீ கடைக்காரர் ராஜீயிடமும் கையெழுத்து வாங்கினார்கள். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் மண் மற்றும் லாரியை கைப்பற்றவில்லை என்றும் நான்

காவல்நிலையத்தில் வைத்து மகசரில் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.